**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–1

O.S.No.426/2024

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 01 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. எம்.கே. முரளி | வயது:58 |
| த/பெ. : திரு. எம்.எஸ்.குஞ்சு | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

1. வாதி ஆஜர். பிரதிவாதி தோன்ற தரப்பினராக உள்ளார். வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 30.06.1998 ம் தேதி வாதியின் தகப்பனார் ராமசாமி ஏற்படுத்திய உயில் ஆவணத்தின் 2 வது சாட்சி கையொப்பம் செய்த நபர். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 30.06.1998 ம் தேதி உயில் ஆவணத்தின் அசல். 2 வதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த உயில் ஆவணம் **வா.சா.ஆ– 1**. உயில் ஆவணத்தில் பிச்சைமுத்து என்பவர் இன்னொரு சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். நானும் பிச்சைமுத்துவும் ஒரே தெருவில் வசித்து வந்தோம்.

2. பிச்சைமுத்து தற்சமயம் உயிருடன் இல்லை. வாதியின் தகப்பனார் வீட்டில் நான் வாடகைதாராக குடியிருந்ததால் வாதியின் தகப்பனாரை எனக்கு தெரியும். ராமசாமி அவருடைய சொத்துக்களை எழுதி தருவதாக சொல்லி உயில் ஆவணத்தை ஏற்படுத்தினார். வா.சா.ஆ– 1 உயில் ஆவணத்தில் உள்ள கையொப்பம் ராமசாமியுடையது. அதில் அவர் கையொப்பம் செய்ததை பிச்சைமுத்து, சண்முகம் ஆகியோர் பார்த்தோம். நான் அதன் பிறகு 2 வது சாட்சி கையொப்பம் செய்தேன்.

எனக்கு முன்பு முதல் சாட்சியாக பிச்சை முத்து கையொப்பம் செய்தார். நாங்கள் இருவரும் உயில் ஆவணத்தில் கையொப்பம் செய்ததை ராமசாமி பார்த்தார்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.11.01 16:22:13 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.

கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

P.W.-2

O.S.No.426/2024

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 01 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. கிருஷ்ணசாமி எ கிட்டுசாமி | வயது:74 |
| த/பெ. : திரு. ராமசாமி | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி ஆஜர். பிரதிவாதி தோன்ற தரப்பினராக உள்ளார். வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் வாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 17.11.1961 – பழனியப்பன் பெயரில் உள்ள கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 2** |
| 20.01.1964 – பழனியப்பன், ராமசாமிஇடையே ஏற்பட்ட பாகபிரிவினை பத்திரம் | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 3** |
| 30.12.1999 – செந்தில்குமார் பெயரில் வாதியின் தகப்பனார் ஏற்படுத்திய தானசெட்டில் மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 4** |
| 31.12.1999 – ராமசாமி, இளவர் கதிர்வேல் பெயரில் ஏற்படுத்திய தானசெட்டில் மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 5** |
| 16.2.1987 – திருப்பூர் நகரம், பல்லடம் வட்டம், வார்டு இ, | அசல் | **வா.சா.ஆ 6** |

| | | |
|---|---|---|
| கொங்கு நகர் மெயின் ரோடு, புல எண். 3 கதவு எண். 12/8 க்குரிய பட்டா | | |
| 21.07.2021 – திருப்பூர் வடக்கு வார்டு இ, பிளக்கு 136, கொங்கு நகர் மெயின் ரோடு, சர்வே எண். 3,4,5 க்குரிய TSLR பதிவேடு | கணினி நகல் | **வா.சா.ஆ 7** |
| 23.05.2000 – ராமசாமி இறப்பு சான்றிதழ் | உண்மை நகல் | **வா.சா.ஆ 8** |
| 17.03.2016 – கதவு எண். 335/171 க்குரிய வீட்டு வரி ரசீது | அசல் | **வா.சா.ஆ 9** |
| 17.03.2016 – கதவு எண். 335/171 க்குரிய தண்ணீர் வரி ரசீது | அசல் | **வா.சா.ஆ 10** |
| 17.03.2016 – கதவு எண். 335/171 க்குரிய மீன்கட்டண வரி ரசீது | அசல் | **வா.சா.ஆ 11** |
| 12.12.1996 – ராமசாமி பெயரில் உள்ள குடிநீர் விநியோக கட்டண அட்டை மற்றும் மின்கட்டண அட்டை – 3 எண்ணிக்கை | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 12** |
| 24.12.1988 – தமிழ்நாடு மின்சார வாரியம் கிட்டுசாமிக்கு அனுப்பிய கடிதம், 8/94, 8/99, 19.11.1990, 14.12.1996, 18.09.1996, 10/88, 10/90, 08/2000, 06/94 தேதியில் செலுத்தப்பட்ட மின்கட்டண ரசீதுகள் – 9 எண்ணிக்கை | | **வா.சா.ஆ 13** |
| 21.08.2000 – திருப்பூர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண். 635/2004 வழக்குரை | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 14** |
| 2.2.2003 – திருப்பூர் சார்பு நீதிமன்றம் இடைகால மனு எண். 1250/2000 அ.வ.எண். 461/2000 மனு மற்றும் உத்தரவுகள் | | **வா.சா.ஆ 15** |
| 18.12.2004 – திருப்பூர் மாவட்ட உரிமையியல் | சான்றிட்ட | **வா.சா.ஆ 16** |

| | | |
|---|---|---|
| நீதிமன்றம் அ.வ.எண். 635/2004 தீர்ப்பாணை | நகல் | |
| 18.12.2004 – திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண். 635/2004 தீர்ப்புரை | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 17** |
| 17.11.2003 – திருப்பூர் சார்பு நீதிமன்றம் இடைகால மனு எண். 1300/2000 அ.வ.எண். 461/2000 நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை மற்றும் வரைபடம் | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 18** |
| 27.06.2022 – திருப்பூர் வடக்கு வார்டு இ, நகர புல எண்.100, 4, 5 க்குரிய புலவரைபடம் | கணினி நகல் | **வா.சா.ஆ 19** |
| 06.12.2024 – தாவா சொத்திற்குரிய வழிகாட்டு மதிப்பு ஆவணம் | கணினி நகல் | **வா.சா.ஆ 20** |
| வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது | ஒளி நகல் | **வா.சா.ஆ 21** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.11.01 16:22:18 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.